**03.09.2024**

**CC 62/2023**

**PW1 : ராக்கம்மாள்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1) நான் சாக்கோட்டை காவல் நிலையத்தில் வாய்மொழியாக புகார் கொடுத்தேன். நான் வாய்மொழியாக பணம் கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். நான் காரைக்குடி துணை கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன் என்றாலும், அப்புகாரை சாக்கோட்டை காவல் நிலையத்திற்கு அனுப்பி அதன் அடிப்படையில் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்தது அல்ல. அதில் உள்ள கையெழுத்தும் என்னுடையது இல்லை. நான் கொடுத்த புகாருக்கு சாக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் மனு ரசீது கொடுத்தார்கள் என்றாலும் அதில் நான் கையொப்பம் செய்து வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த புகாரில் எதிரி ரூ. 7 லட்சம் கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. புதுபட்டி காவல்நிலையத்தில் என்னை விசாரிக்கவில்லை. நான் எனது உறவினர்களிடம் பணம் பெற்றுக்கொடுத்ததாகவும் அதனால் உறவினர்கள் என் மீது புகார் அளித்து புதுபட்டி காவல்நிலையத்தில் என்னை விசாரித்தாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.**

**2) நான் எதிரியிடம் ரூ.6 லட்சம் கொடுத்ததாகவும், அதற்கான வட்டி மற்றும் அசல் ஆகியவை கணக்கீடு செய்து பட்டியல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு நான் பணம் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தனர் என்றால் கல்யாணி என்பவர் மட்டும் இருந்தார். கல்யாணி எவ்வித கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் எதிரி கையொப்பம் செய்திருந்தார் என்ற விபரம் மேற்படி கல்யாணிக்கு தெரியும். கடனுறுதிசீட்டில் பூர்த்தி செய்யாமல் எதிரியின் கையொப்பம் மட்டும் பெற்று வாங்கிகொண்டேன் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு எதிரி பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறுகிறார். எதிரி பணம் வாங்கிய போது கையொப்பம் மட்டும் செய்த இரண்டு காசோலைகள் கொடுத்தாரா என்றால் ஒரு காசோலை மட்டும் கொடுத்தார். சாட்சி பின்னிட்டு காசோலையை பணம் வாங்கிய போது**

கொடுக்கவில்லை நான் பணத்தை கேட்டபோதுதான் கொடுத்தார் என்று கூறுகிறார். வழக்கு காசோலையை நானே பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரி பூர்த்தி செய்தார்.

3) காசோலையில் ராக்கம்மாள் 5 லட்சம் என்று எழுதியது நானா என்றால் இல்லை எதிரி எழுதினார். நான் தாக்கல் செய்துள்ள புகார்மனுவில் உள்ள எனது கையொப்பமும், காசோலையில் உள்ள ராக்கம்மாள் என்ற பெயரும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் இல்லை. காசோலையை நான் பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துவிட்டு வழக்கிற்காக அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வங்கி ரிட்டன் மெமோ நான் தான் வங்கியில் சென்று பெற்றுக்கொள்ளவேண்டும் என்றாலும், அதை வங்கியில் கொடுக்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுத்ததாக புகார் மனுவில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது கட்சிபடி அசல் தொகை ரூ. 6 லட்சத்திற்கு 2 சதவீதம் வட்டி என்றால் சரிதான். 2 சதவீதம் வட்டியாக மாதம் ரூ. 1000/- என்றாலும், சரிதான். வழக்கு தாக்கல் செய்த வரை ரூ. 33 மாதங்களுக்கு ரூ. 33 ஆயிரம் வட்டி என்றாலும் எனது கட்சி படி எதிரி இது வரை ரூ. 1 லட்சத்து 95 ஆயிரம் செலுத்தியுள்ளார் என்றாலும், மேற்படி வட்டி தொகை ரூ. 33 ஆயிரம் போக பாக்கி தொகை ரூ. 1 லட்சத்து 62 ஆயிரம் அசலில் கழித்து பாக்கி தொகைக்குதான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல. இதுவரை ரூ. 1 லட்சத்து 95 ஆயிரம் செலுத்தியிருக்கிறார். பின்னர் கணக்கீட்டு தருவதாக கூறியிருந்தார்.

4) சாக்கோட்டை காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கும் முன்பு வரை எதிரி என்னிடம் ரூ.4 லட்சத்து 95 ஆயிரம் செலுத்தியிருந்தார் என்றாலும், அதன் பின்னர் ரூ. 1 லட்சத்து 95 ஆயிரம் சேர்த்து ரூ.6 லட்சத்து 95 ஆயிரம் செலுத்திகணக்கை நேர் செய்துவிட்டார் என்றாலும் சரியல்ல. எனக்கு கொடுக்கவேண்டிய தொகையைவிட அதிகப்படியான தொகையை எதிரி செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. இவ்வழக்கு கடன் 2018ம் ஆண்டு வாங்கப்பட்டது என்றாலும், காலாவதியான

கடனுக்காக இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் எடையாளராக வேலை செய்த சமயத்தில் எனக்கு ரூ. 8 ஆயிரம் சம்பளம் இல்லை என்றாலும், மாதத்தில் 10 நாட்கள் தான் வேலை இருக்கும் என்றாலும், தினக்கூலியாக ரூ. 200 முதல் 300 வரை மட்டுமே தருவார்கள் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் ரூ. 6 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2018ம் ஆண்டு கொடுத்த கடனை அசலும், வட்டியுமாக தொகையை பெற்றுக்கொண்டேன் என்றாலும், எதிரியிடம் இருந்து மோசடியாக பணம் பறிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's)
விரைவு நீதிபதி, காரைக்குடி